Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 28 (13-09-1991) வெள்ளிக்கிழமை ஓசை: 207

## வவுனியாவில் தமிழ் ஊழியர் சிங்களம் கற்க வற்புறுத்து

[வவுனியா]

வவுனியாவில் தபாலகங்களைச் சேர்ந்த தற்காலிக ஊழியர்கள் அனைவரும் ஐந்தாண்டு வரையான சிங்கள மொழியைக் கற்க வேண்டும் என்றும் அவ்வாறு சிங்களப் பாடத்தைக் கற்காத ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட மாட்டாது என்றும் வவுனியா பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்டத்தில் சுமார் இருபத்தைந்து தமிழ் இளைஞர்கள் தற்காலிகமாக பிரதம - உப தபாலகங்களில் பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது பிரதம தபாலக அதிகாரியின் கட்டளையை அடுத்து தற்காலிக ஊழியர்கள் வேதனை அடைந்துள்ளனர். (தி),

★ மணலாற்றில் முழுப்பலத்துடனும்

# புலிகளுடன் மோதும் சிறிலங்கா ராணுவம்

## கேணல் சரத் முனசிங்க பேட்டி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் மிகப்பெரும் இராணுவ நடவடிக்கை மணலாறு மாவட்டத்தில் இடம்பெற்று வருவதாகவும், இத்தாக்குதல் நடவடிக்கையில் இராணுவத்தின் முழுப் பலமும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த கேணல் சரத் முனசிங்க செய்தியாளர் மாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற வாராந்த மாநாட்டில் பேசிய கேணல் சரத் முனசிங்க

தரைமார்க்கமாகவும், கடற்படைப் படகுகள் மூலமும், போர் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலமாகவும் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும், 'அக்குனு பலய' (மின்னல் தாக்குதல்) என இந் நடவடிக்கைக்கு பெயரிடப்பட்டிருப்பதாகவும் கூறினார். இந்த நடவடிக்கையில் கிட்டத்தட்ட சிறிலங்காவின் முழு இராணுவமுமே ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், காடுகளில் நடத்தப்படும் மிகப் பெரிய தாக்குதல் இது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை இப் பத்திரிகையாளர் மாநாட்டில் மணலாறு யுத்தம் தொடர்பாக வீடியோ படங்களும் காட்டப்பட்டன. இதில் சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா அப்பகுதிக்குச் சென்று இராணுவத்துடன் உரையாடுவதும் காட்டப்பட்டது.

## 52 படை பலி; 50 படுகாயம்

(மணலாறு)

மணலாற்றுக் காட்டுப்பகுதியில் இருவாரமாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் இம் மோதலில் நான்கு அதிகாரிகள் உட்பட ஐம்பத்திரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ஐம்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

அதேவேளை இம்மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பு இதைவிட அதிகம் என்று சுயாதீன செய்தி வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பருத்தித்துறை மீனவர் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பிராந்தியத்தில் மீன் பிடிக்கச்சென்ற ஒருவரை சிறிலங்கா கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மாறும் இவரை மீட்பதற்கு உதவுமாறும் இவரது உறவினர்கள் யாழ் அரச செயலகத்திற்குவிண்ணப்பித்துள்ளனர்.

## போராட்டத்தை மீண்டும்

## வீரவணக்கம்

### நேசன், கோபிநாத்

(நமது நிருபர்)

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் 09-09-91 அன்று நேசன் (சிவநேசன் சிவசங்கர், மானிப்பாய் மேற்கு) என்பவரும். 11-09-91 அன்று கோபிநாத் (வேலுப்பிள்ளை புஷ்பராசா, உடுவில் தெற்கு, சுன்னாகம்) என்பவரும் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

## அழுகிய நிலையில் முதியவர் சடலம்

(வவுனியா)

வவுனியா பட்டாணிச்சி புளியங்குளம் பகுதி வீடொன்றில் முதியவர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா கணேசபுரம் பகுதியைச் சேர்ந்தவரே இறந்து கிடப்பதாகவும், இவர் கடந்த வாரம் வவுனியா நகரிலிருந்து குறுக்குப் பாதை வழியாக கணேசபுரம் பகுதி நோக்கி வந்த சமயம் சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது (தி)

## எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரை நகரில் இருந்து மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் நடாத்திஉள்ளனர்.

# சித்தாண்டி பொலிஸை புலிகள் தாக்கி அழித்தனர்

## 10 பொலிஸ் பலி; ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டி பொலிஸ் நிலையம் நேற்று முன்தினம் புலிகளால் கைப்பற்றப்பட்டது. இம்மோதலில் பத்துப் பொலிஸார் கொல்லப்பட்டனர். ஒருவர் கைது செய்யப்பட்டார். ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

புலிகள் தரப்பில் ஆறு வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

நேற்று அதிகாலை 1.20 மணியில் இருந்து 2.50 மணி வரை சித்தாண்டிப் பொலிஸ் நிலையம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து பொலிஸ் நிலையம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. இப் பொலிஸ் நிலையம் மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் தனியாருக்கு சொந்தமான அரிசியாலையொன்றில் அமைந்திருந்தது.

இத் தாக்குதலின் போது பத்து பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஒருவர் கைது செய்யப்பட்டார். பலர் படுகாயமுற்றனர் காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு ஏனையோர் பொலிஸ் நிலையத்தை விட்டு ஓடிவிட்டனர்.

சித்தாண்டிப் பொலிஸ் நிலையத்தின்மீதும் புலிகள் தாக்குதலை மேற்கொண்ட வேளை இப்பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாக இருந்த இரு இராணுவ முகாம்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர்.

சித்தாண்டிப் பொலிஸ் நிலையத்திற்கு 300 யார் தொலைவில் உள்ள முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமும். 500 யார் தொலைவிலுள்ள மாவடி ஓடை இராணுவ முகாமுமே தாக்குதலுக்குள்ளான இராணுவ முகாம்களாகும் புலிகளின் இத்தாக்குதலினால் சித்தாண்டி பொலிசாருக்கு உதவியாக இம் முகாம்களில் இருந்து வெளிவர நினைத்த இராணுவத்தினரின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டியில் ஆயுதங்கள், பொருள்கள் புலிகளால் மீட்பு

(மட்டக்களப்பு)

சித்தாண்டி பொலிஸ் நிலையத்தில் இருந்து விடுதலைப் புலிகளால் நேற்றைய தினம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ ரீ 56-1 ரகத் துப்பாக்கிகள் | 02 |
| அதற்குரிய ரவைக்கூடுகள் | 05 |
| ★ எஸ் எல். ஆர். | 07 |
| அதற்குரிய ரவைக்கூடுகள் | 27 |
| ★ 84 எஸ் ரகத் துப்பாக்கிகள் | 03 |
| அவற்றிற்குரிய ரவைக் கூடுகள் | 06 |
| ★ ஐ எம் ரவைகள் | 1460 |
| ★ ரேட்டோ ரவைகள் | 360 |
| ★ ஏ. கே. எல் எம். ஜி, ரவைக் கூடுகள் | 04 |
| ★ ஏ கே. எல். எம். லிங் | 260 |

(4ஆம் பக்கம் பார்க்க)

## 6 புலிகள் சித்தாண்டித் தாக்குதலில் வீரமரணம்

(மட்டக்களப்பு)

சித்தாண்டி பொலிஸ் நிலையம் மீது நேற்று அதிகாலை புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது

ஆறு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

★ வாமன் (மார்க்கண்டு,

# கேணல் சரத் முனசிங்க பேட்டி

(கொழும்பு)

**சிறிலங்கா இராணுவத்தின் மிகப்பெரும் இராணுவ நடவடிக்கை மணலாறு மாவட்டத்தில் இடம்பெற்று வருவதாகவும், இத்தாக்குதல் நடவடிக்கையில் இராணுவத்தின் முழுப் பலமும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த கேணல் சரத் முனசிங்க செய்தியாளர் மாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற வாராந்த மாநாட்டில் பேசிய கேணல் சரத் முனசிங்க தரைமார்க்கமாகவும், கடற்படைப் படகுகள் மூலமும், போர் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலமாகவும் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும், 'அக்குனு பலய' (மின்னல் தாக்குதல்) என இந் நடவடிக்கைக்கு பெயரிடப்பட்டிருப்பதாகவும் கூறினார். இந்த நடவடிக்கையில் கிட்டத்தட்ட சிறிலங்காவின் முழு இராணுவமுமே ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், காடுகளில் நடத்தப்படும் மிகப் பெரிய தாக்குதல் இது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை இப் பத்திரிகையாளர் மாநாட்டில் மணலாறு யுத்தம் தொடர்பாக வீடியோ படங்களும் காட்டப்பட்டன. இதில் சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா அப்பகுதிக்குச் சென்று இராணுவத்துடன் உரையாடுவதும் காட்டப்பட்டது.

# 52 படை பலி; 50 படுகாயம்

(மணலாறு)

மணலாற்றுக் காட்டுப்பகுதியில் இருவாரமாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் இம்மோதலில் நான்கு அதிகாரிகள் உட்பட ஐம்பத்தியிரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ஐம்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

அதேவேளை இம்மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பு இதைவிட அதிகம் என்று சுயாதீன செய்தி வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பருத்தித்துறை மீனவர் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பிராந்தியத்தில் மீன் பிடிக்கச்சென்ற ஒருவரை சிறிலங்கா கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை மேற்படி கடற்பிராந்தியத்திற்குச் சென்ற பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த சீனிவாசகம் சிவானந்தம் (வயது 30 என்ற நபரை சிறிலங்கா கடற்படையினர் கைது செய்து தமது பீரங்கிப் படகில் ஏற்றிச் சென்றதாக இவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர் தொடர்பான பிந்திய தகவல்களைப் பெற்றுத்தருமாறும் இவரை மீட்பதற்கு உதவுமாறும் இவரது உறவினர்கள் யாழ் அரச செயலகத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

## போராட்டத்தை மீண்டும் தொடங்கும் ஜே. வி பி

(மாத்தறை)

''மீண்டும் எமது போராட்டத்தை தொடருவோம்'', ''மக்களுக்கு விடுதலை விமோசனம் என்பவற்றை பெற்றுத் தருவோம்'' என்றவாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் தெற்கில் மீண்டும் ஜே. வி. பியினரால் ஒட்டப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இன்றைய அரசியல் நெருக்கடியை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தெற்கில் மறைந்திருந்த ஜே வி பியினர் மீண்டும் தலைதூக்கியுள்ளனர்.

இது இன்றைய அரசியல் நெருக்கடியில் ஆளும் கட்சியினருக்குப் புதிய சவாலாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி சுவரொட்டிகளை அகற்றும் பணியில் பொலிசார் ஈடுபட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது.

## லலித்தின் குற்றச்சாட்டுக்கு திலகரட்னா மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிராக கொண்டுவரப்படவிருந்த அரசியல் குற்றச்சாட்டு முயற்சி பற்றி அரசாங்கத்திற்கு அறிவித்தது நான்தான் என்று லலித் அத்துலத் முதலி தன் மீது குற்றஞ் சுமத்தியதை முன்னாள் சபாநாயகர் ஸ்டான்லி திலகரட்னா மறுத்துள்ளார்,

அத்துலத் முதலியை சிலர் ஏமாற்றியுள்ளனர் என்றும், அவர் ஏமாற்றப்பட்டது இது தான் முதல் தடவையும் அல்ல என்றும், ஜே. வி. பி. யினரின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குவைத்தால் திரும்பியோர் படிவங்கள் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

குவைத்தில் இருந்து நாடு திரும்பியவர்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவங்களின் பிரதிகள் யாழ். மாவட்டத்தின் அனைத்துக் கிராமசேவையாளர் அலுவலகங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி நிவாரணத்திற்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களின் இரு பிரதிகளை யாழ். செயலகத்திற்கு காலதாமதமாகாமல் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர். (க)

நேசன் (சிவநேசன் சிவசங்கர், மானிப்பாய் மேற்கு) என்பவரும், 11-09-91 அன்று கோபிநாத் (வேலுப்பிள்ளை புஷ்பராசா, உடுவில் தெற்கு, சுன்னாகம்) என்பவரும் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

## அழுகிய நிலையில் முதியவர் சடலம்

(வவுனியா)

வவுனியா பட்டாணிச்சி புளியங்குளம் பகுதி வீடொன்றில் முதியவர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா கணேசபுரம் பகுதியைச் சேர்ந்தவரே இறந்து கிடப்பதாகவும், இவர் கடந்த வாரம் வவுனியா நகரிலிருந்து குறுக்குப் பாதை வழியாக கணேசபுரம் பகுதி நோக்கி வந்த சமயம் சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது (தி)

## எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் இருந்து மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று மூன்தினம் இரவு 9.30 மணியளவில் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. தொடர்ச்சியாக பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் பெரிய அளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை. (க)

## மதில் விழுந்து கை துண்டிக்கப் பட்டது

(யாழ்ப்பாணம்)

மதிலின்மேல் ஏறி விளையாடிய பத்து வயதுச் சிறுவனின் கையின்மீது மதில் உடைந்து விழுந்ததால் அச்சிறுவனின் ஒரு கை துண்டிக்கப்பட்டுள்ளது

யாழ் நாவலர் வீதியைச் சேர்ந்த ம. சுசீந்திரன் (வயது 10) என்ற சிறுவனுக்கே மேற்படி நிலைமை ஏற்பட்டுள்ளது

## சட்டத்தரணிகள் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வதியும் சகல சட்டத்தரணிகளையும் இன்று

(4ஆம் பக்கம் பார்க்க)

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டி பொலிஸ் நிலையம் நேற்று முன்தினம் புலிகளால் கைப்பற்றப்பட்டது. இம்மோதலில் பத்துப் பொலிஸார் கொல்லப்பட்டனர். ஒருவர் கைது செய்யப்பட்டார். ஆயுதங்கள் மீட்கப்பட்டன.**

**புலிகள் தரப்பில் ஆறு வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.**

நேற்று அதிகாலை 1. 20 மணியில் இருந்து 2.50 மணி வரை சித்தாண்டிப் பொலிஸ் நிலையம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து பொலிஸ் நிலையம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. இப் பொலிஸ் நிலையம் மட்டக்களப்பு – வாழைச்சேனை பிரதான வீதியில் தனியாருக்கு சொந்தமான அரிசியாலையொன்றில் அமைந்திருந்தது.

இத்தாக்குதலின் போது பத்து பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஒருவர் கைது செய்யப்பட்டார். பலர் படுகாயமுற்றனர் காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு ஏனையோர் பொலிஸ் நிலையத்தை விட்டு ஓடிவிட்டனர்.

சித்தாண்டிப் பொலிஸ் நிலையத்தின்மீதும் புலிகள் தாக்குதலை மேற்கொண்ட வேளை இப்பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாக இருந்த இரு இராணுவ முகாம்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர்.

சித்தாண்டிப் பொலிஸ் நிலையத்திற்கு 300 யார் தொலைவில் உள்ள முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமும், 500 யார் தொலைவிலுள்ள மாவடி ஓடை இராணுவ முகாமுமே தாக்குதலுக்குள்ளான இராணுவ முகாம்களாகும் புலிகளின் இத்தாக்குதலினால் சித்தாண்டி பொலிசாருக்கு உதவியாக இம் முகாம்களில் இருந்து வெளிவர நினைத்த இராணுவத்தினரின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டியில் ஆயுதங்கள், பொருள்கள் புலிகளால் மீட்பு

(மட்டக்களப்பு)

சித்தாண்டி பொலிஸ் நிலையத்தில் இருந்து விடுதலைப் புலிகளால் நேற்றைய தினம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

★ ரீ 56-1 ரகத் துப்பாக்கிகள் 02
அதற்குரிய ரவைக்கூடுகள் 05
★ எஸ் எல். ஆர். 07
அதற்குரிய ரவைக்கூடுகள் 27
★ 84 எஸ் ரகத் துப்பாக்கிகள் 03
அவற்றிற்குரிய ரவைக் கூடுகள் 06
★ ஐ எம் ரவைகள் 1460
★ ரெட்டோ ரவைகள் 360
★ ஏ. கே. எல் எம். ஜி, ரவைக் கூடுகள் 04
★ ஏ கே. எல். எம். விங் 260

(4ஆம் பக்கம் பார்க்க)

## 6 புலிகள் சித்தாண்டித் தாக்குதலில் வீரமரணம்

(மட்டக்களப்பு)

சித்தாண்டி பொலிஸ் நிலையம் மீது நேற்று அதிகாலை புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஆறு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

★ வாமன் (மார்க்கண்டு, தேவன், தபாற்கந்தோர் வீதி, காரைநகர்)
★ பிறேம்குமார் (விநாயகமூர்த்தி ரவிச்சந்திரன், விநாயகபுரம், மட்டக்களப்பு)
★ ஜெயகணேஸ் (நமசிவாயம் ரஜனிகாந், ஆறாம் வட்டாரம் கல்முனை)
★ மதன் (சோமசுந்தரம், மகிளூர்முனை, களுவாஞ்சிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அனுமதியில் சில மாற்றங்கள்

(நமது நிருபர்)

அநேக பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வவுனியா சந்தைக்கு மாவட்ட ரீதியாக அனுமதிப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது. புதிய ஏற்பாட்டின்படி வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தோர் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தோர் திங்கள், செவ்வாய்க் கிழமைகளிலும், யாழ், மட்டக்களப்பு, திருக்கோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தோர் புதன், வியாழக்கிழமைகளிலும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் தொண்டா பேச்சு நடத்தவில்லை

(கொழும்பு)

- பிரட்மன்

அமைச்சர் தொண்டமானுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லையென்றும், எந்தப் பேச்சுவார்த்தைகளும் நடக்கவில்லையென்றும், கொழும்பில் நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் நிருபர் ஒருவரின் கேள்விக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

# மண்டைதீவில் கிணற்றிலிருந்து மேலும் 24 எலும்புக்கூடுகள் மீட்பு

(மண்டைதீவு)

மண்டைதீவில் நேற்று மீளவும் கிணறுகளைத் தோண்டிய போது மேலும் 24 பேருடைய எலும்புக்கூடுகளும், உடைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இத்துடன் இதுவரைக்கும் மொத்தம் ஐந்து கிணறுகளில் 55 பேருடைய எலும்புக்கூடுகளும், உடைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (88)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

சிங்கர் தையல் இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: கௌரி தொழிலகம், 538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (R/1654)

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (B/3099)


### மாவீரன்

மகனே! — உன்னை
மத்தளம் படிக்க
அனுப்பினாள் உன்
தாய் ...
நீ ......
கோட்டை கொத்தளத்
தில்
எதிரியின் ...
தளத்தினை அழிக்க
ஓடினாய் — இன்று
தேடினாய் பட்டம்:
"மாவீரன்" என்று

— வாஞ்சிநாதன்

### வங்கிக்கணக்கிற்கு நிவாரணப்பணம்

கடந்த வருடம் முதல் கடும் பாதிப்பிற்குள்ளான வங்கிகளுக்குரிய நிவாரணப் பணம் அவரவர் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுஜூன்மாதத்தின் பின் இறந்த, ஊனமுற்ற காயமடைந்தவர்களுக்கே மேற்படி நிவாரணப் பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றின் ஒரு தொகுதிப் பணம் குறிப்பிட்ட வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என சம்பந்தப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கடிதங்கள் யாழ். செயலக புனர்வாழ்வு பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச)


## வெளிவாரி பட்டப்படிப்புக்கள்

பேராதனை - யாழ்ப்பாணம்

கலைமுதற் தேர்வு - G. A. Q.
வர்த்தக முதற் தேர்வு - 1st in Com.

A/Lஇல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ யாழ். பல்கலைக்கழக விண்ணப்ப முடிவு திகதி 30 . 09 . 1991

விரிவுரைகள் ஆரம்பம்: 14 . 09 . 1991

★ பேராதனை பல்கலைக்கழக விண்ணப்ப முடிவு திகதி: 05 . 10 . 1991

விரிவுரைகள் ஆரம்பம்: 05 . 10 . 1991

மேலதிக விபரங்களுக்கு: நிர்வாகி

புதிய உயர் கல்லூரி
(New College of High Studies)
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(B-3090)

## ஜாம், புரோட்டினெக்ஸ் போத்தல்கள் தேவை

எமது தொழில் நிறுவனத்திற்கு ஜாம் நிரப்புவதற்கு மேற்படி போத்தல்கள் தேவை. பெருந்தொகையாக விநியோகம் செய்யக் கூடியவர்களிடமிருந்தும் சிறுதொகையாக விநியோகம் செய்யக் கூடியவர்களிடமிருந்தும் கிழமை நாட்களில் காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணிவரை சந்தை விலையில் கொள்வனவு செய்யப்படும்.

ரேஸ்ட்லைன் இன்ரஸ்ரிஸ் (தனி) லிமிடெட்
TASTLINE INDUSTRIES PVT) Ltd.
14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(நட்டாதெரு சந்தியில் இருந்து அரசடி வீதியால் நல்லூர் செல்லும் போது இடது பக்கம் வரும் முதல் ஒழுங்கை,) (R/1732)

### சுகாதார அமைச்சு

கவனிப்பாளர்கள் (பரிசாரகர்கள் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புப்

### போட்டிப் பரீட்சை - 1991

சுகாதார திணைக்களத்தில், மேற்கூறிய பதவிகளுக்கென, பின்வரும் தகைமைகளுடைய 18 வயதிற்கும் 40 வயதிற்கு மிடைப்பட்டவர்களும் இலங்கைப் பிரஜைகளுமான ஆண் / பெண் இரு பாலாரிடமிருந்தும் பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) கல்வித்தகைமைகள் - விண்ணப்பதாரிகள்/ சிரேட்ட கல்வித் தராதரச் சான்றிதழ் அல்லது கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணம்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழி அல்லது இலக்கியம், கணிதம் / எண் கணிதம்/வர்த்தகஎண்கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் அல்லது என். சி. ஜீ. ஈ பரீட்சையில் முதல்மொழியும் கணிதமும் உட்பட ஆறு பாடங்களில் இரண்


## நினைவு கூருகின்றோம்...

1991 - 09 - 13



கப்டன்
அஞ்சனா



லெப்டினன்ட்
நெப்போலியன்



குருபரன்



கப்டன்
ஆனந்தபாபு



லெப்.குகன்



1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய
இரத்தினம் (பூநகரி)

1988ஆம் ஆண்டு இறால் பாலத்தில் இந்தியப் படைவீரருடனான மோதலில் வீரமரணமெய்திய

2-ம் லெப். சுருளி (முத்துக்குமார் பாலசிங்கம் - பள்ளிக்குடியிருப்பு)

ஆரையம்பதியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

றியாஸ்/அருணா (தியாகராஜா சதீஸ்வரன் ஆரையம்பதி - 8

சன்னாசி பரந்தனில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

2-ம்லெப் ராதா (சிவகுரு தங்கவேல் சன்னாசி பரந்தன், நெடுங்கேணி)

யாழ். கோட்டை இராணுவத்துடனான மோதலின் போது வீரமரணமெய்திய

கப்டன் ஆனந்தபாபு (ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் - பூவரசங்குளம், வவுனியா)

றெஜினோல்ட் (விநாசித்தம்பி வினோகரன் - மாமூலை, முள்ளியவளை)

சுரேன் (சின்னத்துரை சுதாகர் - தம்பலகாமம், திருக்கோணமலை)

குணேஸ் (ஜெயக்கிலிஜெகநாதன்-காங்கேசன்துறை)

லெப். நெப்போலியன்
(சங்கரசிவம் விக்னேஸ்வரன் - நெப்போலியன் வீதி, தாவடி, கொக்குவில்)

நிவாஸ் (சின்னத்தம்பி ராமச்சந்திரன் -வீராடசேனை, மட்டக்களப்பு)

றொபின் (பேரின்பராசா கணேஸ் - பன்னங்கண்டி, ...



சுரேன்



சுகாதார அமைச்சு

கவனிப்பாளர்கள் (பரிசாரகர்கள் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புப்

## போட்டிப் பரீட்சை - 1991

சுகாதார திணைக்களத்தில், மேற்கூறிய பதவிகளுக்கென, பின்வரும் தகைமைகளுடைய 18 வயதிற்கும் 40 வயதிற்கு மிடைப்பட்டவர்களும் இலங்கைப் பிரஜைகளுமான ஆண் / பெண் இருபாலாரிடமிருந்தும் பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) கல்வித்தகைமைகள் - விண்ணப்பதாரிகள் / சிரேட்ட கல்வித் தராதரச் சான்றிதழ் அல்லது கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணம்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் / தமிழ்மொழி அல்லது இலக்கியம். கணிதம் / எண் கணிதம் / வர்த்தகஎண்கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் அல்லது என். சி ஜீ.ஈ பரீட்சையில் முதல்மொழியும் கணிதமும் உட்பட ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் 1991 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதியன்று பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு 02 எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(2) வயதெல்லை - 18 வயதிற்கும் 40 வயதிற்கு மிடைப்பட்டவர்கள்.

வேறு தேவையான சகல விபரங்களுக்கும் 23 08.91 திகதியிடப்பட்ட இலக்கம் 677 வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்க.

டாக்டர் ந. கனகசபை
சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

(B-3111)

# நினைவு கூறுகின்றோம்...

## 1991 - 09 - 13



லெப்.குகன்



றெஜினோல்ட்



தமிழ்ச்செல்வன்



கப்டன் அஞ்சனா



லெப்டினன்ட் நெப்போலியன்



குருபரன்



கப்டன் ஆனந்தபாபு

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய
இரத்தினம் (பூநகரி)

1988ஆம் ஆண்டு இறால் பாலத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
2-ம் லெப். சுருளி (முத்துக்குமார் பாலசிங்கம் - பள்ளிக்குடியிருப்பு)

ஆரையம்பதியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
றியாஸ்/அருணா (தியாகராஜா சதீஸ்வரன் ஆரையம்பதி - 8

சன்னாசி பரந்தனில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
2-ம்லெப் ராதா (சிவகுரு தங்கவேல் சன்னாசி பரந்தன், நெடுங்கேணி)

வல்வெட்டித்துறையில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
லெப். குகன் (இளஞ்சிங்கம் இளஞ்செழியன் - அத்துளு கரவெட்டி கிழக்கு)

1989ஆம் ஆண்டு கட்டைப்பறிச்சானில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
லெப். ரூபன் (இ. திருச்செல்வம் -திருக்கோணமலை)

மூதூர் கட்டைபறிச்சான் பகுதியில், விபுலானந்த மகாவித்தியாலயக் கட்டிடத்தினுள் வைத்து இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவ - மாணவியரான சிறுவர்கள், மற்றும் இளம் பெண்கள் உட்பட 17 தமிழர்கள்.

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட
★ பிள்ளையான் காளிராசா

1990ஆம் ஆண்டு யாழ். கோட்டை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய
கப்டன் அஞ்சனா கோணேஸ்வரி பொன்னம்பலம் (798, அன்சார்வீதி, வட்டக்கச்சி)

யாழ். கோட்டை இராணுவத்துடனான மோதலின் போது வீரமரணமெய்திய

கப்டன் ஆனந்தபாபு (ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் - பூவரசங்குளம், வவுனியா)

றெஜினோல்ட் (விநாசித்தம்பி விநோகரன் - மாமூலை, முள்ளியவளை)

சுரேன் (சின்னத்துரை சுதாகர் - தம்பலகாமம், திருக்கோணமலை)

குணேஸ் (ஜெயக்கிளிஜெகநாதன்-காங்கேசன்துறை)

லெப். நெப்போலியன்
(சங்கரசிவம் விக்னேஸ்வரன் - நெப்போலியன் வீதி, தாவடி, கொக்குவில்)

நிவாஸ் (சின்னத்தம்பி ராமச்சந்திரன் -வீராடசேனை, மட்டக்களப்பு)

றொபின் (பேபின்பராசா கணேஸ் - பன்னங்கண்டி, 3-ம் வாய்க்கால், பரந்தன்)

குருபரன் (சங்கரலிங்கம் யோகசேகரன் - கொக்குவில் மேற்கு)

தமிழ்ச்செல்வன் (நடராசா நந்தரூபன் - வண்ணாங்கேணி)

விஜயன் (கந்தப்பு தெய்வேந்திரம் - கப்புது)

சந்திரபாபு (யோகசிகாமணி இரகவன் - 49, சட்டநாதர் வீதி, நல்லூர்)

நீக்கிளஸ் (சுப்பையா ரவி - கப்புது)

சின்னவத்தையில் ரோந்து வந்த சிறிலங்காப் படையுடனான மோதலில் வீரமரணமெய்திய
சைமன் (கோயிற்போரதீவு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் காளிராசா சுரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3105)



சுரேன்



சந்திரபாபு



நிவாஸ்

# "முப்படைகளின் பிரதம தளபதியான பிரேமதாசா கடமைகளை திருப்திகரமாக நாட்டிற்கு ஆற்றவில்லை"

ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பு, சுஷரத்து 38 (2) 'ஏ'யின் பிரகாரம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அதிருப்தியாளர், அவருக்கு எதிராக கௌரவ சபாநாயகரிடம் சமர்ப்பித்த குற்றச் சாட்டு மனுவில் காணப்படும் சில முக்கியமான குற்றச் சாட்டுகள் பின்வருமாறு:

★ பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி பாதுகாப்புச் சபைக் கூட்டங்களுக்கு ஒரு முறையாவது தலைமை வகிக்கவில்லை.

★ தேவையான பாதுகாப்பை மக்களுக்கு வழங்குவதற்கும், சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளார்.

★ நாட்டின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அரசியல் சாகசங்களைச் செய்துள்ளார்

★ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கியதன் மூலம் படையினர் உட்பட ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்படுவதற்கு உடந்தையாக இருந்தமை.

★ பாராளுமன்றத்துக்குச்சரிநிகர் சமானமாக அனைத்துக் கட்சி மகாநாட்டைக் கூட்டி தேசிய பிரச்சினைகள் குறித்து ஆலோசனை கலந்ததன் மூலம் உயர் அமைப்பான பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும், சிறப்புரிமையையும் குறைத்தமை.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா முப்படைகளின் பிரதம தளபதி தனது பிரதான கடமைகளை திருப்திகரமாகவும், நாட்டிற்கு நன்மை தரும் வகையிலும் நிறைவேற்றியுள்ளார் என்பதை ஜனாதிபதியின் செயல்கள் நிரூபிக்கவில்லை என்பதற்கு உதாரணமாகவே மேற்படி குற்றச் சாட்டுகள் சுட்டிக் காட்டப்பட்டதாக அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செயலாளர் நியமனங்கள்

சுஷரத்து 52 (1) இன் பிரகாரம் அமைச்சுகளுக்கான செயலாளர்களை நியமனம் செய்வதற்கு ஜனாதிபதிக்குத் தத்துவம் (அதிகாரம்) உண்டு. ஆனால் அவர் அமைச்சர்களின் செயலாளர்களை நியமனம் செய்துள்ளார். பின்வரும் நியமனங்களை வழங்கியதன் மூலம் யாப்பினால் வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு மாறாகச் செயற்பட்டுள்ளார்.

★ கே. எம் அபேயசிங்கா பிரதம மந்திரியின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார். அமைச்சின் செயலாளரை நியமனம் செய்யும் அதிகாரம் மட்டும்தான் ஜனாதிபதிக்கு உண்டு.

★ திட்ட அமைச்சர்களின் செயலாளர்களாக 22 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

★ ராஜாங்க அமைச்சர்களின் செயலாளர்களாக 29 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

இந்தச் செயலாளர்கள் தாம் கடமையாற்றும் அமைச்சர்களின் அமைச்சுகள் பற்றி ஜனாதிபதிக்கு அந்தரங்க அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதியினால் கேட்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு செயலாளர்கள் கருமமாற்றுவது சுஷரத்துகள் 52 (1) க்கும், 55 (1) க்கும் முரணானது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## றிச்சேட் டி சொயிஸா கொலை

★ நாடறிந்த பத்திரிகையாளர் றிச்சேட் டி சொய்ஸா கொலைசெய்யப்பட்டுள்ளார்.

★ மாநகரசபை உறுப்பினர் லக்ஷ்மன் பெரேரா காணாமற் போனமை,

★ ஹசினா ஹூசையின் காணாமற்போனமை உட்பட ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கைக் கூலிகளால் துன்புறுத்தப்பட்டும், கடத்திச் செல்லப்பட்டும், காணாமற் போயும், தடுத்து வைக்கப் பட்டும் கொலை செய்யப் பட்டும் உள்ளார்கள்.



ஜனாதிபதி நாடு, அரசாங்கம் மற்றும் முப்படைகளின் தலைவர் என்ற முறையில் இவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கத் தவறியதோடு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவதற்குத் தடையாகவும் செயற்பட்டுள்ளார்.

## அதிகாரத் துஷ்பிரயோகம் லஞ்சம்

ஜனாதிபதியின் செயற்பாடுகளும் மற்றும் குடும்பத்தினர் நண்பர்களின் செயற்பாடுகளும் ஜனாதிபதியை லஞ்சம், ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகியன தொடர்பான குற்றவாளியாக இதன் கீழ் கைவைப்பமிட்டோர் எண்ணத் தோன்றுகிறது. [குற்றச்சாட்டை நியாயப் படுத்தும் வகையில் ஒரு பட்டியல் தரப்படுகிறது அதில் சில:

★ ஏயர்லங்கா அடாசக் குடும்பத்தினருக்கு நியமனங்களும் ஒப்பந்த வேலைகளும் வழங்கியமை.

★ ஜனாதிபதியின் மருமகன் ரோகன் ஜெயக்கொடி முகாமையாளராக நியமனம் பெற்றுள்ளார்.

ஹியூ - ஜே இன்ரர்நஷனல் நிறுவனத்துக்கு விமானப் பொதி முன்னுரிமை.

★ ஜோர்தான் விமான ஒப்பந்தம் -மகாராஜா நிறுவனம்.

★ தனியார் தொலைக் காட்சி நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு மகாராஜா நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டமை.

★ அரசாங்க நிலங்களையும், கட்டடங்களையும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் வழங்கியமை: (உ - ம்) நுவரேலியாவில் 45 ஏக்கர் நிலம் 99வருடக் குத்தகையில் ஹியூ-ஜேக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ மக்கள் மயமாக்கல் என்ற திட்டத்தின் கீழ் பொது நிறுவனங்களை சொந்த நன்மையும், வேறு நன்மைகள் கருதியும் விலைபேசி விற்றமை.

## உடல் - உளப் பலவீனம்

உடல் உளப் பலவீனங்களினால் ஜனாதிபதி தன் கடமைகளை ஆற்றமுடியாதுள்ளார் என்பதும் எமது குற்றச்சாட்டாகும் என்று அந்தக் குற்றச்சாட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில்

★ புராதன மன்னர்களின் சிம்மாசனம்போன்ற இருக்கை ஒன்றிற்குப் பொன்முலாம் பூசி அரசமுறை வைபவங்களில் ஜனாதிபதி இல்லத்தில் உபயோகிப்பது.

★ கம் உதாவ கொண்டாட்டங்கள் என்ற போர்வையில் பல லட்சம் ரூபா செலவில் அலங்காரங்கள் செய்து தனது பிறந்ததினத்தைக் கொண்டாடுவது ஜனாதிபதியைப் போற்றிப் புகழ்வது போன்ற ஆடல், பாடல், பேச்சு நிகழ்ச்சிகளை வைத்து தனது செயல்களுக்கு மக்களின் ஆதரவு இருக்கிறது என்று ஆத்மதிருப்தியடைதல்.

★ பல லட்சம் ரூபா செலவில் கோவில்களையும், டாகோபாக்களையும், 'புராதன அரசர்களின் சிலைகளையும் நிறுவுவதன் மூலம் துட்டகைமுனுவுடன் சமமாகத் தன்னை ஒப்புநோக்குதல், எதிர்கால சந்ததி தன்னையும் துட்டகைமுனு போல கௌரவிக்கும் என்றொரு எண்ணம்.

★ பொய்யான கதைகளையும், படங்களையும் பத்திரிகைகளில் பிரசுரித்து மக்களைத் தவறான வழியில் அற்புதங்களை நம்பும்படி செய்தல், (உ-ம்) ருவன்வெலிசேயாவுக்கு மேல் சந்திரன்.

★ தன்னுடைய குற்றங்களை மறைப்பதற்காக தர்ம அசோகன் போல் செயற்படுதல்.

★ உத்தியோகபூர்வ இல்லத்தையும், தனது சொந்த இல்லத்தையும் 500 பாதுகாப்புப் படையினரைக் கொண்டு பாதுகாத்து தனது மனைவி பற்றிய நிரந்தரமான பயத்துடனும், சந்தேகத்துடனும் வாழ்தல்.

★ தன்னை ஒரு கவிஞனாகவும், எழுத்தாளனாகவும், அறிவாளியாகவும் காட்டுவதற்காக மற்றவர்கள் எழுதிய புத்தகங்களைத் தான் எழுதியதாகப் பாசாங்கு செய்து அதினால் வரும் வருமானத்தைத் தாரைவார்த்தல்.

★ தனது பெற்றோர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களைக் கவனியாது கைவிட்டுப் பின் இப்போது பொது நிதியில் கிராமங்கள் இரண்டினை பெற்றோர் பெயர்களில் அமைத்திருப்பது. ஒன்று மிகம கிராமம். மற்றது மூகம கிராமம் இதைத் தனது ஆத்ம திருப்திக்காகவே செய்துள்ளார்.

★ தன் சகோதரர்களையும் பெற்றோர்களையும்கைவிட்ட ஜனாதிபதி குற்றங்குறையில்லாத மனிதன் போல் தன்னைக் காட்டுதல்.

★ தன்னை ஒரு அறிவாளி என்று காட்டுவதற்காகக் கல்வி கேள்விகளில் சிறந்தோரைக் கண்டித்துப் பேசுதல்.

★ சாதாரணவாழ்க்கைவாழ்வதாகச் சொல்லிக்கொள்ளும் அதேவேளையில் ஆடம்பரமாக வாழ்தல்.

★ கடும்கோபம், மற்றவர்கள் மேல் சந்தேகம் கொள்வதனால் தனது உளவளக் குறைவை வெளிக்காட்டுதல்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சி ஒரு தனிமனிதன் சர்வாதிகாரம் என்றும் குற்றச்சாட்டுமனு குறிப்பிடுகிறது.

தொகுப்பு: மதன்

# "நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆரின் நீண்ட நாள் திட்டம்"



...யாகும்.

மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்றுத்துறை பலம்வாய்ந்ததாகும். அது குறிப்பிட்ட சில வருடங்களுக்குப் பதவியிலிருக்கும் பாராளு...

...நாயக்கா அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருந்த காலமது

யாப்பு அமைப்பு ஆக்கச் சபையில் (அரசியல் நிர்ணய சபை) நிறைவேற்று அதிகா...

...நாடாகப் பிரித்தானிய பொதுநலவாய நாடுகள் அமைப்பில்சேர்ந்துகொண்டது

யாப்பு அமைப்பு ஆக்கச் சபை கூடி ஆலோசனை கலந்தபின் 1972ஆம் ஆண்டு...

## அணிசேரா இயக்கம்

# பொருளாதார உறவில் கவனம் செலுத்தவேண்டும்

அணிசேரா இயக்கம் தனது கவனத்தை உலக பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதிலும் செலுத்தவேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் பரிகரணம், சர்வதேச சமாதானம் போன்ற விடயங்களுடன் நிற்காது மேற்படி நாடுகள் கைத்தொழில் நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் இடையிலான உறவுகளுக்கு முக்கிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ளத் தவறியுள்ளார்.

★ நாட்டின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் அரசியல் சாகசங்களைச் செய்துள்ளார்

★ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கியதன் மூலம் படையினர் உட்பட ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்படுவதற்கு உடந்தையாக இருந்தமை.

★ பாராளுமன்றத்துக்குச்சரிநிகர் சமானமாக அனைத்துக் கட்சி மகாநாட்டைக் கூட்டி தேசிய பிரச்சினைகள் குறித்து ஆலோசனை கலந்ததன் மூலம் உயர் அமைப்பான பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும், சிறப்புரிமையையும் குறைத்தமை.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா முப்படைகளின் பிரதம தளபதி தனது பிரதான கடமைகளை திருப்திகரமாகவும், நாட்டிற்கு நன்மை தரும் வகையிலும் நிறைவேற்றியுள்ளராக நியமனம் பெற்றுள்ளார்.

அமைச்சின் செயலாளரை நியமனம் செய்யும் அதிகாரம் மட்டும்தான் ஜனாதிபதிக்கு உண்டு.

★ திட்ட அமைச்சர்களின் செயலாளர்களாக 22 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

★ ராஜாங்க அமைச்சர்களின் செயலாளர்களாக 29 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

இந்தச் செயலாளர்கள் தாம் கடமையாற்றும் அமைச்சர்களின் அமைச்சுகள் பற்றி ஜனாதிபதிக்கு அந்தரங்க அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதியினால் கேட்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு செயலாளர்கள் கருமமாற்றுவது சுஷரத்துகள் 52 (1) க்கும், 55 (1) க்கும் முரணானது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

றிச்சேட் டி சொயிஸா கொலை

★ நாடறிந்த பத்திரிகை



ஜனாதிபதி நாடு, அரசாங்கம் மற்றும் முப்படைகளின் தலைவர் என்ற முறையில் இவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கத் தவறியதோடு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவதற்குத் தடையாகவும் செயற்பட்டுள்ளார்.

அதிகாரத் துஷ்பிரயோகம் லஞ்சம்

ஜனாதிபதியின் செயற்பாடுகளும் எற்றும் குடும்பத்தினர் நண்பர்களின் செயற்பாடு பந்தம் -மகாராஜா நிறுவனம்.

★ தனியார் தொலைக் காட்சி நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு மகாராஜா நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டமை.

★ அரசாங்க நிலங்களையும், கட்டடங்களையும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் வழங்கியமை: (உ - ம்) நுவரேலியாவில் 45 ஏக்கர் நிலம் 99வருடக் குத்தகையில் ஹியூஜேக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ மக்கள் மயமாக்கல் என்ற திட்டத்தின் கீழ் பொது நிறுவனங்களை சொந்த நன்மையும், வேறு நன்மைகள் கருதியும் விலைபேசி விற்றமை.

உடல் - உளப் பலவீனம்

உடல் உளப் பலவீனங்களினால் ஜனாதிபதி தன் கடமைகளை ஆற்றமுடியாது உள்ளார் என்பதும் எமது குற்றச்சாட்டாகும் என்று அந்தக் குற்றச்சாட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில் கைமுனுவுடன் சமமாகத் தன்னை ஒப்புநோக்குதல், எதிர்காலச் சந்ததி தன்னையும் துட்டகைமுனு போல கௌரவிக்கும் என்றொரு எண்ணம்.

★ பொய்யான கதைகளையும், படங்களையும் பத்திரிகைகளில் பிரசுரித்து மக்களைத் தவறான வழியில் அற்புதங்களை நம்பும்படி செய்தல். (உ-ம்) ருவன்வெலிசேயாவுக்கு மேல் சந்திரன்.

★ தன்னுடைய குற்றங்களை மறைப்பதற்காக தர்ம அசோகன் போல் செயற்படுதல்.

★ உத்தியோகபூர்வ இல்லத்தையும், தனது சொந்த இல்லத்தையும் 500 பாதுகாப்புப் படையினரைக் கொண்டு பாதுகாத்து தனது மனைவி பற்றிய நிரந்தரமான பயத்துடனும், சந்தேகத்துடனும் வாழ்தல்.

ஜனாதிபதி குற்றங்குறையில்லாத மனிதன் போல் தன்னைக் காட்டுதல்.

★ தன்னை ஒரு அறிவாளி என்று காட்டுவதற்காகக் கல்வி கேள்விகளில் சிறந்தோரைக் கண்டித்துப் பேசுதல்.


★ சாதாரணவாழ்க்கைவாழ்வதாகச் சொல்லிக்கொள்ளும் அதேவேளையில் ஆடம்பரமாக வாழ்தல்.

★ கடும்கோபம், மற்றவர்கள் மேல் சந்தேகம் கொள்வதனால் தனது உளவளக் குறைவை வெளிக்காட்டுதல்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சி ஒரு தனிமனிதன் சர்வாதிகாரம் என்றும் குற்றச்சாட்டுமனு குறிப்பிடுகிறது

தொகுப்பு: மதன்

# “நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆரின் நீண்ட நாள் திட்டம்”



டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தில் 1965—1970 காலப்பகுதியில் நான் அமைச்சராக இருந்த போது கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தில் 1966 டிசம்பரில் உரை நிகழ்த்தினேன். அந்த உரையில், சிறிலங்காவில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகம் செய்வது பற்றி முதன் முறையாக யோசனை தெரிவித்தேன். அப்போது என்னால் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள் வருமாறு:

சில நாடுகளில் நிறைவேற்றுத்துறை மக்களினால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகிறது. அதன்செயற்பாடு சில வருடங்களாகும். அது ஆட்சியிலிருக்கும் காலத்தில் பாராளுமன்றத்தில் தங்கியிராது...... பிரான்சு நாட்டு யாப்பு அமெரிக்க பிரித்தானிய யாப்புக்களின் கூட்டுச் சேர்க்கையாகும்.

மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்றுத்துறை பலம்வாய்ந்ததாகும். அது குறிப்பிட்ட சில வருடங்களுக்குப் பதவியிலிருக்கும் பாராளுமன்றத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு அது உட்பட்டதன்று. அதனால் மக்கள் விரோதமில்லாத சரியான முடிவுகளைத் துணிகரமாக எடுக்க முடியும் பொது மக்கள் விரோதமான முடிவுகளைப் பாராளுமன்றத்தில் கட்சி கட்டுப்படுத்தும்.

> 1978 ஆம் ஆண்டு சிறிலங்கா யாப்பு பற்றி மூன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா கொழும்பு வை எம். சி ஏயில் ஜூலை 2 ஆம் திகதி நிகழ்த்திய உரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

நமது நாடு போன்று பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் வளர்முக நாடுகளுக்கு மக்களால் தெரிவு செய்யப்படும் பலமானதொரு நிறைவேற்றுத்துறை இன்று அவசியமானது என்று எனக்குத் தோன்றுகிறது

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்த சமயம் இது பற்றி நான் மீளவும் பிரஸ்தாபித்தேன். அப்போது இருந்த அரசியல் யாப்பில் மாற்றம், திருத்தங்களைச் செய்வதன் மூலம் 1972ஆம் ஆண்டுக் குடியரசு யாப்பைக் கொணர திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருந்த காலமது

யாப்பு அமைப்பு ஆக்கத் சபையில் (அரசியல் நிர்ணய சபை) நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதி ஆட்சி முறை பற்றிய என் கருத்தை முன் வைக்கலாம் என்று ஐக்கிய தேசியக்கட்சி செயற்குழுக் கூட்டத்தில் தெரியப்படுத்தினேன் கட்சி எனது கருத்தை ஆதரிக்கவில்லை. திரு. டட்லி சேனநாயக்காவும் எனது கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அவர் அமெரிக்கா உலகில் உன்னத சக்தி வாய்ந்த நாடாக மாறியமைக்கான காரணம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறை என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

பெப்ரவரி 1948 இல் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சுதந்திரத் தீர்மானத்துக்கமைய சிறிலங்கா டொமினியன் அந்தஸ்து பெற்றது. சிறிலங்கா சுயாதினமும், சுதந்திரமுமான அங்கத்துவ நாடாகப் பிரித்தானிய பொதுநலவாய நாடுகள் அமைப்பில்சேர்ந்துகொண்டது

யாப்பு அமைப்பு ஆக்கற் சபை கூடி ஆலோசனை கலந்தபின் 1972ஆம் ஆண்டு குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டது இந்தப் புதிய யாப்பின் விளைவாகவே சிறிலங்கா ஒரு குடியரசாக மாறியது. ஆனால் வெஸ்ட் மினிஸ்ரர் (பிரித்தானியப் பாராளுமன்ற அமைப்பு) மாதிரியே பின்பற்றப்பட்டது.

பெப்ரவரி 1978இல் அடிப்படையானமாற்றங்கள் இடம் பெற்றன, மூன்றாடும் ஐம்பது வீதப் பெரும்பான்மையினால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்தது, நாட்டை ஆட்சி செய்வதற்கான சட்டவாக்கங்களை உருவாக்குதல் பாராளுமன்றத்தின்பணியாகும்

1978 யாப்பு ஜனநாயக ஆட்சி அமைப்பிற்கென்றே உருவாக்கப்பட்டது. அமெரிக்க உள்நாட்டுப் போரில் திருப்பு முனையாக அமைந்த ஜெற்ஸ்பேர்க் வெற்றியில் இறந்தவர்களின் நினைவாலயத்தைத் திறந்து வைத்து 1863இல் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த ஆபிரஹாம் லிங்கன், குடியாட்சி எனப்படுவது “மக்களால் மக்களுக்கான ஆட்சி” என்று குறிப்பிட்டுள்ளார். (தொடரும்)

அணிசேரா இயக்கம்

## பொருளாதார உறவில் கவனம் செலுத்தவேண்டும்

அணிசேரா இயக்கம் தனது கவனத்தை உலக பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதிலும் செலுத்தவேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் பரிகரணம், சர்வதேச சமாதானம் போன்ற விடயங்களுடன் நிற்காது மேற்படி நாடுகள் கைத்தொழில் நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் இடையிலான உறவுகளுக்கு முக்கிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கியூபாவிலுள்ள சோவியத் துருப்புக்கள் வாபஸ்

(மொஸ்கோ)

கியூபாவிலுள்ள சோவியத் துருப்புகளை மீளப் பெறுவது பற்றி கியூபாத் தலைவர்களுடன் பேசுவதற்கு தான் தயாராக இருப்பதாக சோவியத் அதிபர் கொர்பசேவ் அறிவித்துள்ளார். இதன் மூலம் கியூபா-சோவியத் உறவுகளில் இருந்த நெருக்கம் தளர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கியூபாவில் சுமார் 11,000 சோவியத் துருப்புகள் தங்கியுள்ளன .

கட்சியின் தொர்டர்பு

## மக்களுடன் குறைந்ததால் கம்யூனிசம் குலைந்தது

(லண்டன்)

சோவியத் யூனியனில் போருக்குப் பிந்திய காலத்தில் ஆக்கபூர்வமான பலன்கள் இருந்தபோதும் கூட மக்களுடனான கம்யூனிச கட்சியின் தொடர்பு விட்டுப்போய் விட்டதால் அங்கு கம்யூனிசம் குலைந்து போய்விட்டது என்று மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு தெரிவித்துள்ளார்.

லண்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜோதிபாசு சோவியத் கம்யூனிச கட்சி கடுமையான தவறுகளை செய்துவிட்டதால் அங்கு அது மறைந்து போய்விட்டது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் அங்கு கம்யூனிச ஆட்சி முடிவுக்கு வந்திருப்பதை அடுத்து இந்தியாவிலும் கம்யூனிச இயக்கம் ஓரளவு பாதிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

## 3ஆம் ஆண்டுநினைவஞ்சலி



வீரஜனனம்
15 - 11 - 1959

வீரமரணம்
13 - 09 - 1988

### லெப்டினனட் குகன்
(இளஞ்சிங்கம் இளஞ்செழியன்)

பிறந்த மண்மீட்கும் போரில்
விறல்மிகு வீரனாக
சிறந்த உன் இலட்சியத்தை
சிந்தையில் நிறுத்தி என்றும்
பறந்து நீ பணிகள் ஆற்றி
பாரினில் பீடு பெற்றாய்
இறந்து நீ பசளை யானாய்
இலட்சியப் பயிர் தான் ஓங்க
தன்னலமற்ற உன்றன்
தியாகத்தை நாளும் எண்ணி
அன்பினால் உள்ளம் பொங்க
அஞ்சலி செலுத்துகிறோம்

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
(B-3096)

அப்பா, அம்மா, மூத்தக்கா
சகோதரர்கள், வேந்தன்.


தியாகி திலீபன் தடகள விழா

# மாவட்டரீதியானபோட்டிகள் ஞாயிறு முதல் ஆரம்பம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால்நடாத்தப்படும் தியாகி திலீபன் தடகள விழா வின் மாவட்டமட்டப்போட்டிகள் ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறவுள்ளன.

★ யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக் கிழமை (15-09-91) காலை ஆறு மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும், அதேதினம் காலை ஆறு முப்பது மணிக்குச் சுன்னாகம் சந்தியிலிருந்து பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும் ஆரம்பமாகவுள்ளன.

★ கோண்டாவில்சந்தியில் இருந்து திங்கட்கிழமை (16-09-91) காலை ஆறு மணிக்கு ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டியும், அதேதினம் காலை ஏழு மணிக்கு பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியும் ஆரம்பமாகவுள்ளன.

★ நல்லூர்க்கந்தன் ஆலய முன்றலிலிருந்து செவ்வாய்க் கிழமை (17-09-91) காலை ஆறு மணிக்கு ஆண்களுக்கான வேக நடைப்போட்டியும், அதேதினம் காலை ஏழு மணிக்கு பெண்களுக்கான வேக நடைப் போட்டியும் ஆரம்பமாகவுள்ளன

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்பிரிவு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் இன்று மாலை 4மணியளவில் மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில்நடைபெறவுள்ளது.

சகல உறுப்பினர்களும், கொத்தணிக்குப்பொறுப்பான ஆசிரியர்களும் தவறாது சமுகம் கொடுக்கும்படி கேட்கப் பட்டுள்ளனர்!

### வவுனியா அனுமதி

இதேவேளை அவசர அனுமதிக்கான விண்ணப்பம் உட்பட அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் பழைய விலையிலேயே விற்கப்படுவதாகவும் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் அறிய வருகின்றது.

## வைத்தீஸ்வர பவள விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயப் பவள விழா இரண்டாம் அங்க நிகழ்வான பரிசளிப்பு விழா வித்தியாலய அம்பிகைபாகன் அரங்கில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 30மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்றாம் அங்க நிகழ்வாக கலை விழா நடைபெறவுள்ளது.

### சித்தாண்டியில்ஆயுதங்கள்

| | |
|---|---|
| ★ 0. 38 ரகக் கைத்துப் பாக்கி | 01 |
| ரவைகள் | 30 |
| ★ ஏ. கே ரவைக்கூடுகள் | 05 |
| ★ 5. 56 ரவைகள் | 120 |
| ★ ஜே ஆர். ரகக் கைக் குண்டுகள் | 05 |
| ★ தலைக்கவசங்கள் | 19 |
| ★ இராணுவச் சப்பாத்துக்கள் | 5 சோடி |
| ★ இராணுவப் பைகள் | 02 |
| ★ தண்ணீர்க் கான் | 02 |
| ★ பெல்ட் | 02 |
| ★ றெயின் கோட் | 02 |

### லலித்தின்

கிளர்ச்சி உச்சக்கட்டத்திலிருந்தபோது விஜயவீர, கமநாயக்கா ஆகியோரின் சார்பில் தான் பேசுவதாக கே. சி. எஸ். செனநாயக்கா என்பவர் கூறியதை நம்பி ஏமாந்த

### 6 புலிகள்

குடி)

★ சுந்தரம் (சுந்தையா யோகராஜா, கோரகல்லிமடு மட்டக்களப்பு)

★ வில்லியம் (செல்வராஜா, அம்பலாந்துறை, மட்டக்களப்பு)

இந்த வீரவேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

### புலிகளுடன்

பதிலளித்த ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், சமாதானபேச்சு வார்த்தை நடைபெறுவது சம்பந்தமாக எந்தமுடிவும் எடுக்கப்படவுமில்லை என்று குறிப்பிட்டார்

### சட்டத்தரணி

(13-09-91) காலை 9 மணி முதல் 12 மணிவரை தமிழீழ காவல் துறையின் அலுவலகத்திற்கு சமுகம் தருமாறு காவல் துறையின் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

### சித்தாண்டி

ஆனால் பொலிசாருக்கு உதவியாக உலங்கு வானூர்தி

## நிர்வாக மைய இடஅமைவு தெரிவிற்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட பிராந்தியத்தின் நிர்வாக மையத்திற்கான இடவமைவுத் தெரிவுக்கான கருத்தரங்கு நாளை 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாக மையத்திற்கான பல்வேறு துறைசார்ந்த கருத்துரைகளை பல்வேறு அறிஞர்கள் இக்கருத்தரங்கில் வழங்குவார்கள்.


## யாழ்/பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

[முற்றிலும் பல்கலைக்கழக வசதிகளைக் கொண்ட நிறுவனம்]

**G.A.Q:-** LECTURES IN DAY TIME
LECTURES IN SAT. & SUN.

ஆரம்பம்: 14-09-1991 (காலை 8.00 மணி)

1st. in **COMMERCE**
LECTURES IN DAY TIME
LECTURES IN SAT. & SUN.

ஆரம்பம்:- 14-09-1991 (காலை 8.00மணி)

மு. குறிப்புகள்:-

(அ) பட்டப்படிப்புகளுக்கென தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களும் விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்து போதிக்கின்றனர்

(ஆ) நூலக வசதி மற்றும் வசதிகளைக்கொண்ட நிறுவனம்

(இ) G. A. Q. 1ST IN Com. Day time விரிவுரைகள் ஐந்து நாட்களும் நடைபெறும்.

(ஈ) ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு விரிவுரையாளரைக் கொண்டிருக்கும்

(உ) விக்னா கல்வி நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கான விரிவுரைகள்கீழ்க்காணும் முகவரியில் ஆரம்பமாகும்.

The College of Higher Studies
ANAIPANTHY, JAFFNA.
(ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமையில்)

(B.3076)



## 65-ம் நாள் நினைவஞ்சலி



2 ஆம் லெப்டினனட் பைரவி



## 61-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



இலட்சியப் பயிர் தான் ஓங்க
தன்னலமற்ற உன்றன்
தியாகத்தை நாளும் எண்ணி
அன்பினால் உள்ளம் பொங்க
அஞ்சலி செலுத்துகிறோம்

கரவெட்டி கிழக்கு, | அப்பா, அம்மா, மூத்தக்கா
கரவெட்டி. | சகோதரர்கள், வேந்தன்.

(B-3096)

# 65-ம் நாள் நினைவஞ்சலி



## 2 ஆம் லெப்டினன்ட் பைரவி
(திருமகள் கணேசமூர்த்தி)

வீர ஜனனம் 14.11.1971 — வீர மரணம் 11.07.1991

ஆனையிறவு தடை முகாம் தகர்ப்பு நேரடி மோதலில் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

அளவையூர் தனிலே முகையவிழ்ந்த மொட்டே
அன்பின் திருவுருவாய் அமைந்த எம் திருமகளே
அன்புடன் அடக்கமுடன் பெண் பெருமைதனை
அன்று பறை சாற்றி நின்றாய்
இன்று இப்புனித மண்ணை மீட்டெடுக்க
உன் குருதி தனை ஆறாகப் பாயவிட்டு
தர்மத்தை நிலைநாட்டும் பாதையிலே
நீ வீரமுடன் நடை போட்டுவிட்டாய்
உன் பிரிவை நாம் இன்று ஏற்கவில்லை
உன் நினைவுகளை எம்மால் பிரிக்கவும் முடியவில்லை.

மற்றும் உம்முடன் கரம் இணைந்து குருதி சிந்திய சக போராளிகளுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்

"சிவபதி", | அப்பா, அம்மா,
அளவெட்டி மத்தி, | சகோதரர்கள்,
| உறவினர், நண்பர்கள்.

(B-3110)

---

னை.

★ நல்லூர்க்கந்தன் ஆலய முன்றலிலிருந்து செவ்வாய்க்

## வைத்தீஸ்வர பவள விழா
(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயப் பவள விழா இரண்டாம் அங்க நிகழ்வான பரிசளிப்பு விழா வித்தியாலய அம்பிகைபாகன் அரங்கில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 30மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்றாம் அங்க நிகழ்வாக கலை விழா நடைபெறவுள்ளது.

### சித்தாண்டியில் ஆயுதங்கள்

| | |
|---|---|
| ★ 0. 38 ரகக் கைத்துப்பாக்கி | 01 |
| ரவைகள் | 30 |
| ★ ஏ. கே ரவைக்கூடுகள் | 05 |
| ★ 5.56 ரவைகள் | 120 |
| ★ ஜே ஆர். ரகக் கைக்குண்டுகள் | 05 |
| ★ தலைக்கவசங்கள் | 19 |
| ★ இராணுவச் சப்பாத்துக்கள் | 5 சோடி |
| ★ இராணுவப் பைகள் | 02 |
| ★ தண்ணீர்க் கான் | 02 |
| ★ பெல்ட் | 02 |
| ★ றெயின் கோட் | 02 |

### லலித்தின்

கிளர்ச்சி உச்சக்கட்டத்திலிருந்தபோது விஜயவீர, கமநாயக்கா ஆகியோரின் சார்பில் தான் பேசுவதாக கே. சி. எஸ். செனநாயக்கா என்பவர் கூறியதை நம்பி ஏமாந்தவர் என்பது அனைவரும் தெரிந்ததே என்று ஸ்டான்லி திலகரட்னா தெரிவித்தார்.

முன்னதாக லலித் அத்துலத் முதலி செய்தியாளர்கள் மாநாட்டில் இந்தரகசியத்தை ஸ்டான்லி திலகரட்னாவே அரசாங்கத்திற்கு தெரிவித்ததாக குற்றஞ் சாட்டியிருந்தார்.

ட அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் பழைய விலையிலேயே விற்கப்படுவதாகவும் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் அறிய வருகின்றது.

### 6 புலிகள்

குடி)

★ சுந்தரம் (சந்தையா யோகராஜா, கோரகல்லிமடு மட்டக்களப்பு)

★ வில்லியம் (செல்வராஜா, அம்பலாந்துறை, மட்டக்களப்பு)

இந்த வீரவேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

### புலிகளுடன்

பதிலளித்த ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், சமாதானபேச்சு வார்த்தை நடைபெறுவது சம்பந்தமாக எந்தமுடிவும் எடுக்கப்படவுமில்லை என்று குறிப்பிட்டார்

### சட்டத்தரணி

(13-09-91) காலை 9 மணி முதல் 12 மணிவரை தமிழீழ காவல் துறையின் அலுவலகத்திற்கு சமுகம் தருமாறு காவல் துறையின் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

### சித்தாண்டி

ஆனால் பொலிசாருக்கு உதவியாக உலங்கு வானூர்தியில் இருந்து தொடர்ச்சியாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டவண்ணமிருந்தது.

இதேவேளை இவ்இராணுவ முகாம்கள் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தினருக்கு குறிப்பிடும்படியான சேதங்கள் ஏற்பட்டதாயினும் விபரங்கள் தெரிய வரவில்லை.

---

# கண்ணீர் அஞ்சலி

## நமசிவாயம் தேவராஜன்
(இளைப்பாறிய நில அளவையாளர்)

தோற்றம்: 19 . 04 . 1927 — அவுஸ்திரேலியாவில் மறைவு: 10 . 09 . 1991

வணிக முகாமையியற்றுறை விரிவுரையாளர் திரு. தே. ஜெயராமன் அவர்களின் தந்தையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணிகமுகாமையியற்றுறை | சகவிரிவுரையாள
யாழ். பல்கலைக்கழகம் (R/1739) | நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

LECTURES IN SAT. & SUN.

ஆரம்பம்:- 14-09-1991 (காலை 8.00மணி)

மு. குறிப்புகள்:-

(அ) பட்டப்படிப்புகளுக்கென தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களும் விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்து போதிக்கின்றனர்
(ஆ) நூலக வசதி மற்றும் வசதிகளைக்கொண்ட நிறுவனம்
(இ) G. A. Q. 1ST IN Com. Day time விரிவுரைகள் ஐந்து நாட்களும் நடைபெறும்.
(ஈ) ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு விரிவுரையாளரைக் கொண்டிருக்கும்
(உ) விக்னா கல்வி நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கான விரிவுரைகள்கீழ்க்காணும் முகவரியில் ஆரம்பமாகும்.

The College of Higher Studies
ANAIPANTHY, JAFFNA.
(ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமையில்)

(B.3076)

---

# 61-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும்
# அந்தியேட்டி அழைப்பும்



ஆனையிறவுப்போரில் வீரமரணமடைந்த

## வீரவேங்கை கரிகாலன்
[மாப்பாணர் - உதயகுமார்]

வீரஜனனம் 15-11-1970 — வீரமரணம் 15-07-1991

களத்தினில் வீழ்வதும் வீரமடா — உன்
உளத்தினில் உதித்ததும் தீரமடா — நீ
நிலத்தினில் சிந்தியது உதிரமடா - உன் இலட்சியம்
நிச்சயம் ஈழமாய் மலருமடா!

இன்று (13-09-1991) நடைபெறவிருக்கும் அந்தியேட்டி நிகழ்வில் இயக்க உறுப்பினர்கள், நண்பர்கள் உறவினர்கள் யாவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்

தயாபரன் வீதி (பிரசன்னா) | குடும்பத்தினர்,
ஆவரங்கால் கிழக்கு, | உறவினர்கள்,
புத்தூர். | நண்பர்கள்.

(R/1728)